Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நீர்வளத்துறை

அனுப்புநர்	பெறுநர்
பொறி.ச,செந்தில் குமார், பி.இ., செயற்பொறியாளர், பொபது,. நீ.ஆ.து., மேல் பெண்ணையாறு வடிநில கோட்டம். தருமபுரி –5,	திரு.S.S. ரபி த/பெ ஷா மஹமூத் சாயபு, 35/17 டி பீ பரன் தெரு, திருப்பத்தூர்–635601

கடித எண் 195[M] / கோ.180/ 2024 /வ1 /நாள். .05.2024

அய்யா,

பொருள் : கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம் பெத்தலாப்பள்ளிகிராமம் – சர்வே எண் 91/75, 91/1B3A, 91/72A1C இல் உள்ள நிலவியல் நீர் வழிப்பாதையினை RCC storm Water drain அமைத்து நீர் வழி பாதையில் வரும் மழை நீரினை தங்கு தடையின்றி செல்லும் வகையில்புல எண் 91/75 இல்மாற்றியமைக்க வரப்பெற்ற விண்ணப்பம் – தொடர்பாக

பார்வை :

1. திரு.S.S. ரபி த/பெ ஷா மஹமூத் சாயபு 35/17 டி பீ பரன் தெரு, திருப்பத்தூர் அவர்களின் மனு நாள்: 05.04.2024
2. உதவி செயற்பொறியாளர், நீ,வ,து., கிருஷ்ணகிரி நீர்தேக்கத் திட்ட உபக் கோட்டம் கிருஷ்ணகிரி அணை அவர்களின் கடித எண். கோ 9 / 2024 / உ.செ.பொ / கி.அணை / நாள். 02.05.2024.

******

பார்வை 1–ல் காணும் தங்கள் கடிதத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம் பெத்தலாப்பள்ளி கிராமத்தில் 91/75, 91/1B3A, 91/72A1C புல எண்களில் பட்டா நிலத்தில் உள்ள நிலவியல் நீர் வழிப்பாதையினை மாற்றி 91/75 புல எண்ணில் மாற்றி மாற்றி அமைக்க அனுமதி கோரியுள்ளீர்கள்.

பார்வை 2–ல் காணும் உதவி செயற்பொறியாளர், நீ,வ,து., கிருஷ்ணகிரி நீர்தேக்கத் திட்ட உபக் கோட்டம் கிருஷ்ணகிரி அணை அவர்கள் தள ஆய்வு செய்ததில் கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், பெத்தலாப்பள்ளி கிராமத்தில் சர்வே எண்: 91/75, 91/1B3A, 91/72A1C வழியாக நிலவியல் நீர் வாய்கால் ஒன்று உள்ளது. அப்பகுதியில் மழை காலங்களில் பெய்யும் மழை நீர் அருகே சேகரமாகி புல எண் 91/75 வழியாக புல எண் 91/33 இல் செல்லும் வகையில் உள்ளது. தள ஆய்வில் அவ்வகையான நீர் வழிப்பாதை புலத்தில் இல்லை. அப்பகுதி முழுவதும் வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மழை காலங்களில் வரும் தண்ணீர் அங்குள்ள நிலங்களில் தேங்கி செல்வது தெரிய வருகிறது. ஆகவே நீர்வழிப்பாதையினை புல எண் 91/75 மற்றும் 91/33 க்கு இடையில் தொடர்ச்சியாக செல்லும் வகையில் அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளதின் பேரில் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. நிலவியல் வாய்காலில் நீர் தடையின்றி செல்லும் வகையில் வாய்காலினை அடுத்த புல எண்ணுடன் (புல எண் 91/75 மற்றும் 91/33) சேரும் வகையில் அமைத்தல் வேண்டும். கட்டப்படும் RCC storm Water drain கால்வாய் ஆனது 0.80x 1.50 மீட்டர் அளவுக்கு கால்வாயின் அடி மட்ட அளவு (Sill Level) மாறாமல் அமைத்தல் வேண்டும்.
2. கழிவுநீர் இப்பாதையில் கலக்காத வகையில் தனியாக கழிவு நீர்வாய்கால் அமைக்கப்பட வேண்டும். நீர்பாதையில் மழை தண்ணீர் மட்டுமே செல்லும் வகையில் கால்வாய் அமைத்தல் வேண்டும். மேலும் நிலப்பரப்பானது கால்வாயின் அடிமட்ட அளவில் (Sill Level) இருந்து குறைந்தது 3 அடி உயரத்தில் உள்ளவாறு அமையவேண்டும்.
3. நீர்வழிப்பாதையில் அனுமதிக்கப்பட்ட கட்டுமானங்களை தவிர எவ்விதமான குறுக்கு கட்டுமானங்கள்மேற்கொள்ளகூடாது. ஏதேனும் கட்டுமானங்கள் மேற்கொள்வதாக இருப்பின் இத்துறையிடம் அனுமதிப் பெற்று மேற்கொள்ளப்படவேண்டும். கட்டப்பட்டபின்மழைநீர் முறையாக வெளியேறுவதை உறுதி செய்யப்பட வேண்டும். அனுமதிக்கப்பட்ட வழித்தடம் தவிர எந்தவகையிலும் நீர்போக்கினைமாற்றகூடாது.
4. நீர்வழிப்பாதையினை கடக்க சிறுபாலம் கட்டப்படுவதாக இருப்பின் அதன் கட்டுமான வரைப்படங்கள், கட்டப்படும் இடம் ஆகியவற்றை சமர்பித்து செயற்பொறியாளர், நீவது., மேல் பெண்ணையாறு வடிநிலகோட்டம், தருமபுரி அவர்களிடம் அனுமதி பெற்று அதற்குண்டான பாதை வாடகை செலுத்திமேற் கொள்ளப்படவேண்டும்.
5. நிலவியல் வாய்காலில் எவ்விதமான ஆக்கிரமிப்பும் செய்யகூடாது. இந்த நீரியல் பாதையின் வழியே அரசின் திட்டங்கள் மேற்கொள்ளும் நிலையில் எவ்விதமான ஆட்சேபனையும் தெரிவிக்கசூடாது. நீர்வழிப்பாதையினை தனிபாதையாக கட்டுமானம் செய்துகொள்ள வேண்டும். நீர்வழிப்பாதையானது பொது நிலமாக கருதப்படும்.

6. மனுதாரர் மனுவில் சமர்பிக்கப்பட்டுள்ள வடிவமைப்பில் உள்ளவாறு கற்காரைகால்வாய் பணியினை மேற்கொள்ளவேண்டும். இத்துறை மூலம் ஒப்புதல் பெறப்பட்ட வரைபடம் மற்றும் வடிவமைப்பில் மாறுபட்டு கட்டப்பட்டால் அதனை இடித்து அப்புறப்படுத்த இத்துறைக்கு முழு அதிகாரம் உண்டு, அவ்வாறு இடிக்கும்போது தாங்கள் வழக்கு போட உரிமை ஏதுமில்லை. கட்டுமானங்களை இடித்து எடுப்பதற்கு ஆகும் செலவையும் தாங்களே ஏற்க வேண்டும்.
7. நீர்வழிப்பாதைக்கு தேவையான அனைத்து கட்டுமானங்களும் மனுதாரரின் நிலப்பகுதியிலேயே அமைக்க வேண்டும். மேலும் நீர்பாதையின் அடிமட்ட அளவில் எவ்விதமான மாற்றமும் ஏற்கபடாது.
8. நீர்வழிப்பகுதியில் ஆழ்துளைகிணறுகள் அமைக்க கூடாது. கட்டப்பட்ட பின்மழை நீர்முறையாக வெளியேறுவதை உறுதி செய்யப்படவேண்டும். அனுமதிக்கப்பட்ட வழித்தடம் தவிர எந்தவகையிலும் நீர்போக்கினைமாற்ற கூடாது.
9. நீர்வழிபாதையினை எவ்விதத்திலும் உரிமையாககோர கூடாது. அரசுஅலுவலர்கள் ஆய்வுகளின் போது தெரிவிக்கும் ஆலோசனைகளை அவ்வப்போது முறையாக நடைமுறைபடுத்த வேண்டும்.
10. இந்த அனுமதியினை உரிய அனுமதியின்றி வேறு எவருக்கும் மாற்றக்கூடாது. மனுதாரரால் சமர்பிக்கப்படும் ஆவணங்கள் எவையேனும் போலியானவை என தெரியும் பட்சத்தில் இத்துறை மூலம்வழங்கப்படும்அனுமதிஉடனடியாகஇரத்துசெய்யப்படும்.
11. இத்துறையின் அனுமதி பெற்ற மூன்று மாதத்திற்குள் கட்டுமானங்கள் அனைத்தையும் முடித்து அலுவலரின் ஒப்புதல் பெறவேண்டும். மூன்று மாதங்கள் கடந்து விட்டால் துறையினரிடம் மறு அனுமதி பெறப்படவேண்டும்.
12. அரசுதிட்டங்கள், வேறுகாரணங்களுக்காக அல்லது அதிகமான வெள்ளம் ஏற்பட்டால் அதனை சரிசெய்யும் வகையில் இடித்துவிட்டு கட்டுமானங்கள் மேற்கொள்ள நீர்வளத்துறைக்கு முழு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் இழப்புகளுக்கு இத்துறைஎவ்வகையிலும் பொறுப்பேற்காது.

13. இந்தஅனுமதிதற்காலிகமானது. நிபந்தனைகள் மீறும்சமயத்தில் இந்தமறுப்பின்மை அனுமதி எந்தநேரத்திலும், எவ்வித காரணத்தையும் தெரிவிக்காமல் திரும்பபெற இத்துறைக்கு முழு அதிகாரம் உண்டு. அதே சமயம் மறுப்பின்மை அனுமதி திரும்ப பெறுவதால் மனுதாரருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு இத்துறை பொறுப்பேற்காது.

14. இத்தொழில் நுட்ப அறிக்கை அவ்வப்போது வழங்கப்படும் அரசாணைகளின் மாறுதலுக்கு உட்பட்டதாக அமையும்.

15. தற்போது திருத்தம் செய்து வழங்கப்பட்ட அனுமதியின் பேரில், பணிகளை முடித்து வருவாய் துறையின் பதிவேடுகளில் இத்திருத்தங்களை மனுதாரர் சொந்த செலவில் திருத்தம் செய்து கொள்ள வேண்டும்.

செயற்பொறியாளர், நீ.வ.து.,
மேல் பெண்ணையாறு வடிநில கோட்டம்.
தருமபுரி –5.

6/5/24



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate